TORONTO

**Geoff Rathbone**
General Manager

**Richard Butts, Deputy City Manager**

**Solid Waste Management Services**
25th Floor, East Tower
City Hall, 100 Queen St. W.
Toronto ON M5H 2N2

**Tel:** (416) 338-2010
**E-mail:** accesstoronto@toronto.ca

**புதிய மாநகர உபவிதி – பிளாஸ்திக் கொள்வனவுப் பை**

70% கழிவு-கூளம் தாழ்புலம் செல்வதைத் தவிர்ப்பதே ரொறன்ரோ மாநகரத்தின் இலக்கு. பிளாஸ்திக் பைகளின் தொகையைக் குறைத்து, மீளப் பயன்படுத்தக்கூடிய பைகளின்/கொள்கலங்களின் பாவனையை ஊக்குவிப்பதற்காக, ரொறன்ரோ மாநகர விற்பனை நிலையங்கள் 2009 யூன் 1-ம் திகதி முதல் தமது கொள்வனவுப் பீடத்தில் வைத்து பிளாஸ்திக் பை கோரும் வாடிக்கையாளர்களிடம், ஒரு பிளாஸ்திக் பையுக்கு ஆகக்குறைந்தது 5 சதப்படி கட்டணம் அறவிடுமாறு விதிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் 2009 மார்ச் 31-ம் திகதி கூடி அங்கீகரித்த புதிய **மாநகர விதிக்கோவை அத்தியாயம் 604, பைவகை உபவிதி**க்கு அமையவே அவ்வாறு விதிக்கப்பட்டள்ளது. அங்கீகரிக்கப்பட்ட உபவிதியை நீங்கள் மாநகர இணையத்தளத்தில் வாசிக்கலாம்: http://www.toronto.ca/legdocs/bylaws/2009/law0356.pdf

**முக்கியம்: நீங்கள் ஒரு தலைமை அலுவலகத்தின் பிரதிநிதி என்றால், இந்த விபரப் பொதியை உங்கள் விற்பனை நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் அனுப்பி வைக்கவும். நீங்கள் விற்பனையில் ஈடுபடாதவர் என்றால், இந்த விபரப் பொதியைப் பொருட்படுத்த வேண்டாம்.**

**மேற்படி உபவிதியின்படி ரொறன்ரோ விற்பனையாளர்கள் செய்யவேண்டிய மாற்றம்:**
**2009 யூன் 1-ம் திகதி முதல்:**

- தாம் வாங்கிய பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு பிளாஸ்திக் பை கோரும் வாடிக்கையாளர்களிடம், ஒரு பிளாஸ்திக் பையுக்கு ஆகக்குறைந்தது 5 சதப்படி கட்டணம் அறவிட வேண்டும். கொள்வனவுப் பை வழங்க முன்வராத விற்பனையாளர்கள் (கடதாசிப் பை அல்லது கடதாசிப் பெட்டி கொடுப்பது போன்ற) இலவச மாற்றுவசதி செய்ய வேண்டும்.

- கொள்வனவுப் பீடத்தில் வைத்து பிளாஸ்திக் பை கோரும் வாடிக்கையாளர்களிடம் கட்டணம் அறவிடும்படி மாநகரம் வகுத்த விதி பற்றிய அறிவித்தலை அவர்களுக்குப் புலப்படும் வண்ணம் துலக்கமான ஓரிடத்தில் வைக்க வேண்டும்.

- (வாடிக்கையாளருக்கு பெறுகைச்சீட்டு வழங்கப்பட்டால்) ஒரு பிளாஸ்திக் கொள்வனவுப் பையுக்கான கட்டணம், வாடிக்கையாளர் பயன்படுத்தும் பைகளின் எண்ணிக்கை, அவற்றுக்கு விதிக்கபட்ட மொத்தக் கட்டணம் என்பன பெறுகைச்சீட்டில் பொறிக்கப்பட வேண்டும்

- பிளாஸ்திக் கொள்வனவுப் பைகளுக்குப் பதிலாக வாடிக்கையாளர்கள் தாம் வாங்கும் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு கொண்டுவரும், மீளப் பயன்படுத்தக்கூடிய (துணிப் பைகள், கொள்கலங்கள், பெட்டிகள்) போன்றவற்றுக்கு விற்பனையாளர்கள் இடம்கொடுக்க வெண்டும்.

பிளாஸ்திக் பையுக்கான கட்டணத்தை வைத்திருக்கும் உரித்து விற்பனையாளர்களுக்கு உண்டு. அது ரொறன்ரோ மாநகரத்துக்கு அனுப்பப்படுவதல்ல. விற்பனையாளர்கள் அந்தப் பணத்தை வைத்து இன்னது செய்ய வேண்டும் என்று மாநகரம் நிர்ணயிப்பதில்லை. எனினும், உள்ளூர்ச் சூழல் அல்லது சமூகநலப் பணிகளில் அந்தப் பணம் மீளமுதலீடு செய்யப்படுவதை மாநகரம் ஆதரிக்கிறது.

பிளாஸ்திக் கொள்வனவுப் பையுக்கான கட்டணம் பற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்புகளை மூன்று வெவ்வேறு பருமன்கள் கொண்ட உருக்களில் ரொறன்ரோ மாநகரம் தயாரித்துள்ளது. (அஞ்சல் அட்டை: அகலம் 3 ½ அங்குலம் – உயரம் 6 ¾ அங்குலம்; ஒட்டி: 4 அங்குலம் – 5 அங்குலம்; விளம்பரம்: 8.5 அங்குலம் – 11 அங்குலம்). அவற்றை விற்பனையாளர்கள் இலவசமாகவே பெற்றுக்கொள்ளலாம். உங்கள் விபரப் பொதியில் இரண்டு அஞ்சலட்டை அறிவிப்புகள் அடங்கியுள்ளன. ஒவ்வோர் உருவிலும் மேலதிக மாநகர அறிவிப்புகளைப் பின்வரும் மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் அங்கம் வகிக்கக்கூடிய சங்கத்தின் ஊடாகவும் அவற்றைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. மாநகர இணையத்தளத்தில் அச்சிட்டு எடுக்கக்கூடிய அறிவிப்பு வரைபுக் கோப்புகள் காணப்படுகின்றன: www.toronto.ca/5centbag. அவற்றை விற்பனையாளர்கள் வேண்டியவாறு பதிவிறக்கி, அச்சிட்டுப் பயன்படுத்தலாம்.

**மேலதிக அறிவிப்புகளைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள் (உள்வாயில் தகவல் பீடம்)**

- ரொறன்ரோ மாநகர மண்டபம், 100 Queen St. W., பிரதான தரைக்கூடம், திங்கள் – வெள்ளி காலை 8:30 – மாலை 4:30
- ஸ்காபறோ நகரசமூக நிலையம், 150 Borough Dr., பிரதான தரைக்கூடம், திங்கள் – வெள்ளி காலை 8:30 – மாலை 4:30
- நோர்த் யோர்க் நகரசமூக நிலையம், 5100 Yonge St., பிரதான தரைக்கூடம், திங்கள் – வெள்ளி காலை 8:30 – மாலை 4:30
- ஈஸ்ட் யோர்க் நகரசமூக நிலையம், 850 Coxwell Ave., பிரதான தரைக்கூடம், திங்கள் – வெள்ளி காலை 8:30 – மாலை 4:30
- எற்றோபிக்கோ நகரசமூக நிலையம், 399 The West Mall, பிரதான தரைக்கூடம், திங்கள் – வெள்ளி காலை 8:30 – மாலை 4:30

**கொள்வனவுப் பீடத்தில், துலக்கமான இடத்தில், வாடிக்கையாளர்களுக்கு எளிதில் புலப்படும் வண்ணம் அறிவிப்புகளை வைக்கவும்.**

தமது சொந்த அறிவிப்புகளைப் பயன்படுத்த விரும்பும் விற்பனையாளர்கள் கவனிக்கவும்: உங்கள் விற்பனை நிலையத்துள், துலக்கமான ஓரிடத்தில், ஆகக்குறைந்தது ஒரு அறிவித்தலில் சம்பந்தப்பட்ட உபவிதியின் முழுப் பெயராகிய, **மாநகர விதிக்கோவை அத்தியாயம் 604, பைவகை உபவிதி** என்பது தெளிவாக இடம்பெறுமாறு பார்க்கும்படி மாநகரம் விதித்துள்ளது.

**2010 யூன் 1-ம் திகதி முதல் செல்லுபடியாகும் (பிரிவு 4, அத்தியாயம் 604) என்பதும் உபவிதியில் அடங்கும்:**

- விற்பனையாளர்கள் ரொறன்ரோ மாநகர மீள்பாவனை நிகழ்வுத்திட்டத்துக்கு ஒவ்வாத (உயிர்மங்களால் உருக்குலையக்கூடிய பிளாஸ்திக் பைகள், பசளையாகக்கூடிய பிளாஸ்திக் பைகள், உலோக விபரத் தகடு அல்லது உலோக வளையம், கயிறு அல்லது வன் பிளாஸ்திக் கைபிடி கொண்ட பிளாஸ்திக் பைகள் போன்ற) பிளாஸ்திக் பைகளை வாடிக்கையாளர்களிடம் முன்வைப்பதோ கொடுப்பதோ தடைசெய்யப்படும்.

மாநகர உரிம-நியமப் பகுதிக்கு நியமிக்கப்பட்ட பணியாளர்களே மேற்படி உபவிதியை உங்களுக்கு அறிவுறுத்தி, நடைமுறைப்படுத்தும் பொறுப்புடையவர்கள்.

உங்களுக்கு மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால், மாநகர இணையத்தளத்தை நாடவும்: www.toronto.ca/5centbag. அதில் ஒரு வினாவிடைப் பிரிவும் உண்டு. நீங்கள் மேலும் ஏதாவது கேட்டறிய விரும்பினால், அழைக்கவும்: 416-338-2010 அல்லது மின்னஞ்சல் அனுப்பவும்: accesstoronto@toronto.ca

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள *Toronto Helps Business* என்னும் தகவலேட்டில் சுட்டிக்காட்டிய தொழில்துறைகளுக்கு உதவும்பொருட்டு ரொறன்ரோ மாநகரம் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளை அறிந்து புரிந்துகொள்ளுமாறும் உங்களை நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்,

Geoff Rathbone
General Manager
Solid Waste Management Services

Michael Williams
General Manager
Economic Development, Culture & Tourism

இணைப்புகள்: (இரண்டு அஞ்சலட்டை அறிவிப்புகள், தகவலேடு)

ரொறன்ரோவின் புதிய பிளாஸ்திக் கொள்வனவுப் பை உபவிதி பற்றிய வினாக்கள்?

**அழைக்கவும்: 416-338-2010** www.toronto.ca/5centbag